Source: Tamil Murasu © SPH Media Limited
5 April 2025, Page 9
Permission required for reproduction

# குறும்பாடமாக பரதநாட்டியம்

ரவி சிங்காரம்

சிங்கப்பூரின் லசால் கலைக் கல்லூரி, பரதநாட்டியத்தைக் குறும்பாடத்திட்டமாக அறிமுகம் செய்துள்ளது.

லசால் வழங்கும் பொதுமக்களுக்கான தொடர்கல்வித் திட்டத்தில் பரதநாட்டியம் இணைக்கப்படுகிறது. இதுவரை பேலே (ballet), நடன அசைவு சிகிச்சை, சமகால நடனம் போன்றவைதான் நடனப் பாடங்களாகக் கற்பிக்கப்பட்டன.

இந்திய அறிவுசார்க் கட்டமைப்புகளில் பரதநாட்டியத்தின் வரலாறு, அதன் பண்பாட்டுச் சூழல் ஆகியவற்றோடு புலம்பெயர்ந்த இந்தியர்களுக்குப் பரதநாட்டியம் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது ஆகியன புதிய பாடத்திட்டத்தில் இடம்பெறும்.

பரதநாட்டியத்தைப் புதிதாகக் கற்க விரும்புவோருக்கும் அதைக் கற்றுவருவோருக்கும் இப்பாடத்திட்டம் அடிப்படைகளை வலியுறுத்தும் வகையில் அமையும்.

பரதநாட்டியத்தின் அடிப்படை அசைவுமுறையான ‘அடவு’, கை அசைவுகளான ‘ஹஸ்த பேதா/விநியோகா’, முக்கிய உடல் உறுப்புவகைகளின் அசைவுகளான ‘அங்கலக்ஷனா’, கால், பாத அசைவுகளான ‘பாத/மண்டல பேதா’, இசைத் தாளம், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ‘அபிநயா’, ‘ரசானுபவா’ ஆகியவற்றை இப்பாடம் விளக்கும்.

லசால் கலைக் கல்லூரியின் துணை விரிவுரையாளரும் ‘திரிபடாக்கா’ நடன நிறுவன தோற்றுவிப்பாளருமான திருவாட்டி துர்கா மணிமாறன் இப்பாடத்தை வழிநடத்துவார்.


“பலதரப்பட்ட சமூகத்தினரையும் பெரியவர்களையும் மனத்தில் கொண்டு புதிய பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, பரதநாட்டிய வகுப்புகளில் கடுமையான பயிற்சிகளைச் செய்யவேண்டிய சூழல் ஏற்படலாம் என எண்ணி பெரியவர்கள் அவற்றில் சேரத் தயங்கக்கூடும். அவர்களுக்கும் ஏற்ற விதத்தில் பரதநாட்டியப் பாடம் கற்பிக்கப்படும்,” என்றார் திருவாட்டி துர்கா.

எட்டு வாரங்கள் நீடிக்கும் இப்பாடத்திட்டம், ஆகஸ்ட் 4 முதல் செப்டம்பர் 22 வரை ஒவ்வொரு திங்கள்கிழமையும் இரவு 7 முதல் 9 மணி வரை நடைபெறும். 18 வயதுக்கு மேற்பட்ட பத்து மாணவர்களே ஒவ்வொரு வகுப்பிலும் சேர்க்கப்படுவர். தற்போது ஒரு வகுப்புக்கே விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டாலும் அதிக வரவேற்பு இருந்தால் கூடுதல் வகுப்புகள் வழங்கப்படலாம். பாடத்தில் இணைவதற்கான கட்டணம் $500. ஸ்கில்ஸ்ஃபியூச்சர் பயிற்சி உதவி நிதி மூலம் கட்டணம் செலுத்தலாம்.

மேல்விவரங்களுக்கு https://www.lasalle.edu.sg/continuing-education/short-courses/new-bharatanatyam-adults-i-beginners இணையத்தளத்தை நாடலாம்.

லசால் கலைக் கல்லூரியின் மேடைக்கலைகள் சார்ந்த பட்டயம், பட்டப்படிப்புத் திட்டங்களிலும் கதக், பரதநாட்டியம் போன்ற இந்திய நடனமுறைகள் கற்பிக்கப்பட்டுள்ளன.

லசால் வழங்கும் அனைத்துலக சமகால நடனமுறைகள் பட்டப்படிப்பு (BA (Hons) பாரம்பரிய இந்திய நடனமுறைகளை உள்ளடக்குகிறது.



சிங்கப்பூரின் லசால் கலைக் கல்லூரி பரதநாட்டியத்தைக் குறும்பாடத்திட்டமாக அறிமுகம் செய்துள்ளது.
படம்: லசால் கலைக் கல்லூரி

“ பரதநாட்டிய வகுப்புகளில் கடுமையான பயிற்சிகளைச் செய்யவேண்டும் என எண்ணி, பெரியவர்கள் அவற்றில் சேரத் தயங்குகின்றனர்.

லசால் கலைக் கல்லூரியின் துணை விரிவுரையாளர் துர்கா மணிமாறன்

**Bharatanatyam as a short course**

Singapore's LASALLE College of the Arts has introduced Bharatanatyam as a short course.

Bharatanatyam is incorporated into the continuing education programme offered by LASALLE. So far ballet, dance movement therapy and contemporary dance have been taught as dance courses.

The new course will cover the history of Bharatanatyam in Indian intellectual structures, its cultural context, and why Bharatanatyam is important to the Indian diaspora.

This course will cover the basics of Bharatanatyam for beginners.

This course will explain Bharatanatyam's basic movements 'Adavu', hand movements 'Hasta Pedha/Viniyoga', movements of major body parts 'Angalakshana', leg and foot movements

Source: Tamil Murasu © SPH Media Limited
5 April 2025, Page 9
Permission required for reproduction

'Patha/Mandala Pedha', musical rhythm, 'Abhinaya' and 'Rasanuphava' which express emotions.

Ms Durga Mani Maran, an adjunct lecturer at LASALLE College of the Arts and founder of Tripataka danceLab Singapore will conduct the class.

“This course has been specially curated with the varying communities of participants in mind, especially adults. Many adults fear to join a mainstream Bharatanatyam class as they feel it may be too intensive and they may not be able to cope. Bharatanatyam will be taught in a manner that suits them," said Ms. Durga.

The eight-week course will be held every Monday from 7pm to 9 pm from 4 August to 22 September 2025. Only ten students above the age of 18 will be enrolled in each class. Applications are currently being accepted for one class only, but additional classes may be offered if there is overwhelming demand. The fee to join the course is $500. Fees can be paid through SkillsFuture credits.

For more details visit https://www.lasalle.edu.sg/continuing-education/short-courses/new-bharatanatyam-adults-i-beginners.

Indian dance forms such as Kathak and Bharatanatyam are also taught in LASALLE College of the Arts' performing arts degree and diploma programmes.

The BA (Hons) International Contemporary Dance Practices programme offered by LASALLE covers traditional Indian dance forms.